بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

## Friday Sermon/ வெள்ளிக்கிழமை குத்து.ஃபா 03/02/2017

*(05 Jamadul Awwal 1438 AH)*

# LOVE ONE ANOTHER/ஒன்றுக்கொன்றுஅன்பாகயிருங்கள்



## Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)

உலக மக்களுக்கு சலாம் தெரிவித்த பிறகு தஷஹ்ஹுதும் தஅவசும் சூரா.ஃ.அல் பாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு உரையாற்றினார்.

இன்றைய எனது வெள்ளிக்கிழமை பேருரை ஜமாஅத்து சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்களுக்கும் மற்றனைவர்களுக்குமாக ஆகும். உங்களில் ஒவ்வொருவரும் ஒன்றுக்கொன்று அன்பாகயிருங்கள். நம்பிக்கையுடனிருங்கள். இஸ்லாமின் வழியினை (சமாதான வழி) பின்பற்றிக் கொள்ளுங்கள். தங்களைக்குறித்த அறிவை சுயம் பெற்றுக் கொள்ளுங்கள். முஸ்லீம்கள் என அல்லாஹ் பெயர் சூட்டப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் இன்று பௌதீக கட்டுப்பாட்டின் வட்டாரத்திற்கும் மரணபீதியின் பாலும் அமர்ந்து கொண்டனர். மது அருந்தும்ஆற்றல், ஆவேசஉணர்ச்சி, உல்லாசசக்தி போன்றவையால் அவர்கள் பாழாகி விட்டனர்(ஆன்மீகத்தின் மீது வைத்துக் கொள்ள வேண்டிய அந்த

ஆற்றல்களை பௌதீகத்தின் பால் வைத்திருக்கின்றனர். அதன் காரணமாக அவர்கள் பாழடைந்த பொருளாக பரிணமிக்கின்றனர்). அவரின் மத வாழ்க்கை இன்று புத்தகத்தில் மட்டுமாக சுருங்கிக்கொண்டது. மேலும் அவர்கள் இன்று கபறின்பால் சுயம் வாழ்கின்றனர்.

தொழுகைக்கும் நோன்பு நோற்பிற்கும் மற்றும் இஸ்லாமின் ஊன்றுகோலாகவும் திகழ்ந்துக் கொள்ள வேண்டிய ஆன்மா அவரின் உடம்பிலிருந்து வெளியேறிக்கொண்டது. தொழுகையும் நோன்பு இழக்க நேர்ந்த ஆன்மா அதன் காரணமாக(அவருக்கு) பிறரிடம் இணக்கம் வைத்துக் கொள்வதற்கு இயலாத நிலை வந்தடைந்தது. மட்டுமின்றி திருக்குர்ஆனின் சூடேற்காததால்(Warmth) அவர்களின் இதயம் பழுதடைந்ததோடு மக்கள் கட்டுப்பாட்டினையே இழந்தனர். இவ்வகையான ஆட்கள் முன்னேற்றமடைவார்கள் என்று எப்படி நமக்கு எதிர்பார்த்துக் கொள்ள முடியும்? யா அல்லாஹ் முஸ்லீம்கள் தங்களின் நிலை நிற்பையே சுயம் மறந்து விட்டனர். நீ அவர்களுக்கு கைகொடுப்பாயாக! அவர்களோ? தண்ணீரால் தங்களின் சிரமே மூழ்கிவிட்ட அவல நிலையினை அடைந்திருக்கின்றனர்.

தொழுகையில் சுஜூத் என்பது பூமியே விறை கொள்ளுமளவிற்கான ஒன்றாகும். மட்டுமா? கதிரவனையும் சந்திரனையும் அதன் திசையிலிருந்து அசையவைக்குமளவிற்கு அது ஆற்றலுடையதுமாகும். இந்த சுஜூதின் பொருளை அவர்கள் உணர்ந்திருந்தால் பாறைகல்கள் கூட சிதறி இப்பூமியிலிருந்து மறைந்து போயிருக்கும். தாழ்மை என்றால் என்ன என்பதைக் கூட தெரியாத நிலையில் இப்போதவர்கள் இருக்கின்றனர். முதுமையின் பலவீனமல்லாமல் மற்றெதுவும் அவர்களிடம் இப்போதில்லை. சுஜூதின் போது கூறும் வார்த்தைகளின் மகத்துவத்தைக் குறித்து எவருக்கு தெரியும்? “எனது இறைவன் உன்னதமானவன் ஆவான்” அவன் பரிசுத்தன் ஆவான் இவ்வாறு நிகழக் காரணம் நம் குற்றத்தாலல்லவா? அல்லது இந்த வார்த்தைகளில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டுவிட்டது என நம்புகின்றேன். ஒவ்வொருவரும் தங்களின் பாதை வழியாக விரைந்தோடுகின்றனர். எவ்வித நோக்கமோ இலட்சியமோயின்றி மலைமீது நாம் அலைந்து கொள்கின்றோம். அற்புதம் வாய்ந்த ஒரு விஷயத்தை பாருங்கள், திருக்குர் ஆன் நம் கைகளிலுள்ளது. அதில் உண்மையைத் தேடிக்கொள்ள எந்த உற்சாகமும் அவர்கள் காட்டுவதில்லை. இரட்சகனான அல்லாஹ் அவர்களுக்கு ஒரு தரிசனம் அளித்து அவர்களை அருளுக்குரியதாக மாற்றியிருந்திருப்பின் (என நான் எண்ணுகின்றேன்) **நீங்கள் சிந்தியுங்கள். நேரம் விரைந்து செல்கின்றது. “அடிப்படையற்ற யோசனைகள்” “மரணித்த இதயங்கள்” “கற்பனைகளில் மூழ்கியிருக்கும் வெட்கமற்ற கண்கள்”… அறிவியலும் கலையும்(Science and Art) மதமும் அரசியலும்(Religion and Politics) புத்தியும் சிந்தையும்(Intelligence and Sensibility)**

**இவையெல்லாமெல்லாம் பௌதீகத்தை பிரதட்சிணம்(Revolves) வைத்து கொள்கின்றது.**

இளையதலைமுறைகளின்(Young People) உதடுகள் தாகம் கொள்கின்றது. ஆனால் அவர்களின் அருந்து பாத்திரம் சூனியமாகயிருக்கின்றது. அவர்கள் தங்களின் முகங்களை தேய்த்து பளபளப்பாக்கியுள்ளனர். ஆனால் அவர்களின் ஆன்மா கருமையாகயிருக்கின்றது. அவர்களின் புத்தி பிரகாசித்துக் கொள்கின்றது ஆனால் அவர்களின் பார்வை ஒளி மழுங்கியிருக்கின்றது. திட நம்பிக்கையும் எதிர்பாரலும் இழந்த வாழ்க்கைகள்… இளைய தலைமுறையின் முன்னால் எதையும் காணயியலவில்லை. அவர்கள் நிசாரமான உயிரினங்கள் போன்று மாறிவிட்டனர். அவர்கள் சுயமாகவே மறுத்து(இறைவனை) கொள்போர்களும். பிறரின் மீது நம்பிக்கை கொள்போர்களும் ஆவார்கள்.

**எனது தோழர்களே நீங்கள் எல்லா வேளைகளிலும் உங்களின் செயல்களில் நேர்மையுடனிருங்கள். அரசர்களை கண்டு அஞ்சிக் கொள்ளாதீர்கள். அதிகாரிகள் என்றும் அதிகாரத் தலையகம் என்றும் கூறிக்கொள்வோர்களிலிருந்து மீட்சியை பெற்றுக் கொள்ளுங்கள். அகந்தை, கோபம் காரணமாக நீதியினை நிலை நாட்ட மறந்துவிடாதீர்கள். நீங்கள் பணக்காரனாகயிருந்தாலும் சரி ஏழையாகயிருந்தாலும் சரி நீங்கள் மிக நல்ல நிலையில் பருமாறிக் கொள்ளுங்கள். நேர்வழி என்பது முற்றிலும் சிரமகரமான ஒன்றாகும். அதை புத்தியீனம் விளக்கிக் கொள்ள முயற்சிக்காமலிருங்கள். உங்களின் இதயங்களுக்குள் அல்லாமல் அதை(நேர்வழி) வேறெங்கும் தேடிக் கொள்ள வேண்டாம். ஆன்மாவின் ஊன்றுகோல் என்பது இறைவனை நினைவுகொள்தலும், இறை சிந்தனையும் ஆகும். சரீரத்தின் ஊன்றுகோல் என்பது இளமைப்பருவத்தில் சுயம் அதை (இறைவனை நினைவுகொள்தல், இறை சிந்தனை) மதித்து நடந்துக் கொள்தலும் ஆகும். உடம்பையும் ஆன்மாவையும் நன்குப்படுத்திக் கொள்வதன் வாயிலாகவே இம்மையிலும் மறுமையிலும் அதிகாரம் கைவருவது. அனைத்தையும் படைத்த இறைவனை ஒப்பற்றவகையில் நினைவு கூறுவதே நம் இவ்வுலக பயணத்தின் நோக்கம். மதத்தின் இரகசியம் என்பது உண்மையை கூறிக் கொள்தலும் தடைச் செய்யப்பட்ட பேச்சு வார்த்தைகளிலிருந்து விலகிக் கொள்தலும் ஆகும். தன்னந்தனியாக இருந்தாலும் சரி நண்பர்களுடன் சேர்ந்திருந்தாலும் சரி, இந்த இரண்டு சூழ்நிலைகளும் இறை அழகினைக் குறித்து சிந்திப்பதற்காகவே வழங்கப்பட்டிருக்கின்றது. இறைவழி வைரம் போன்றிருக்க வேண்டும். அதை உடைத்துக் கொள்ள இயலாமலிருக்க வேண்டும். உங்கள் இதயங்களை அல்லாஹ்வுடன் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள். நல்லொழுக்க உணர்வுடன் வாழுங்கள்.**

நம் தீன் முழுவதும் அல்லாஹ்வினை தேடிக் கொள்வதில் பிரகாசித்திட வேண்டும். அதன் ஆரம்பம் மரியாதையும் அதன் முடிவு அன்புமாகும். ரோஜா பூவின் மகத்துவம் என்பது அதன் நிறமும் அதன் நன் மணமும் ஆகும். நிறமும் நன் மணமும் இல்லாத ரோஜா பூவை போன்று, மரியாதையை இழந்தவன் சன்மானமற்றவன் ஆவான். நல்நடத்தமில்லாத ஒரு இளைஞனை பார்க்கும் பொழுது எனது முன்னால், பகல் இருளாகின்றது. மட்டுமா? என் இதயம் அடக்கமின்றி கோபத்தால் நிறைகின்றது. என்பிரிய தூதர் (ஸல்)வின் காலகட்டம் என் நினைவுக்கு வருகின்றது. நான் வாழ்ந்திருக்கும் இக்கால கட்டத்தைக் குறித்து எண்ணி நான் வருந்துகின்றேன். (இவ்வகையான ஒரு காலகட்டத்தில் அல்லாஹ் எதற்காக என்னை எழும்பச் செய்தேன் என்பதைக் குறித்து மிக நன்கு அறிபவன் அவனே ஆவான்) கடந்துசென்ற அந்த வனப்புமிக்க நூற்றாண்டுகள் திரும்பிவந்திட நான் ஆசைப்படுகின்றேன். பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது அவளின் கணவனாவான்., அதைபோன்றே மறித்தும். அதல்லாமல் கல்லறையில் மண் போன்றோ?(உங்களின் உள்ளம்) ஆண்களின் பாதுகாப்பிற்காக தீய நண்பர்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பது மட்டுமே அதற்கு பரிகாரம். மோசமான வாாத்தைகள் கூறுவது பாவமாகும். தீய நடத்தைகாரனும் (அவநம்பிக்கையாளர்) நம்பிக்கையாளரும் இரண்டும் அல்லாஹ்வின் படைப்புகளே ஆவார்கள். மனிதாபிமானம் என்றால் மனிதனை மதித்துக் கொள்தலாகும். ஆகவே மனிதனின் மகத்துவத்தை உணர்ந்து கொள்ளுங்கள். மனித ஒற்றுமையே உங்களை ஒரு மனிதராக பரிணமிக்கச் செய்வது. ஆகவே நீங்கள் நட்பின் பாதை வழியாக பயணம் மேற்கொள்ளுங்கள் (இஸ்லாமிக சகோதரத்தும்) என்பதன் பொருள் அமைதி வாய்ந்த சகோதரத்துவம் என்றாகும்.

அன்புக்குரிய அடியானுக்கு பயணம் புரிவதற்கான வழி இறைவனிடமிருந்தே கிடைத்து விடுகின்றது. நம்பிக்கையாளரைப் போன்றே தீய நடப்புகாரனுக்கும் அன்பை வாரிக்கோரி வழங்கும் நண்பனாக அந்த அடியான் மாறுகின்றான். ஆகவே நீங்கள் தீய செயல்களை தவிர்த்துக் கொள்ளுங்கள். நற்செயல்களை எடுத்துக் கொள்ளுங்கள். இறைஅன்புக்காக தாகம் கொள்பவனைப் போன்றே இறைஊற்றிலிருந்தே அருந்திக் கொள்ளுங்கள். உங்களின் இதயம் மண்ணுலக விஷயங்களின் சிறை சாலைக்குள்ளாகயிருந்தாலும் அந்த இதயத்தின் வட்டவடிவமான வியூகங்கள் முழுவதும் ஞானங்களாகும். நீங்கள் ஒரு பணக்காரனாகயிருந்தால் கூட இறைவனிடமான தொடர்பை துண்டிக்காமலிருங்கள். அந்த செல்வங்களுக்கு நீங்கள் கீழ்பட்டுவிடாமலிருங்கள். அதன்(செல்வங்கள்) ஒளி உங்களை மயங்கச் செய்துவிடும். இந்த பழகிய விதை(மனிதனை மயக்கவைக்கும் செல்வம்) உங்களின் முன்னோர்களின் காலத்திலிருந்தே நிலைநின்றுவரும் ஒன்றாகும். இதயத்தின் விருப்பத்தை மட்டுமே நீங்கள் தேடிக்கொள்ளுங்கள். அதாவது அல்லாஹ்விடம் மட்டுமே அதை தேடிக் கொள்ள வேண்டும். அல்லாமல் சுல்தானிடமோ, அரசனிடமோ, அல்லது வேறு எவரிடமோ அல்ல! அல்லாஹ்வை

மனிதன் எவ்வகையில் அஞ்சிக் கொள்வதற்கு? அய்யோ கடினம்! பௌதீக பொருள்களை பார்த்து பார்த்து, அல்லாஹ் அவனது இரக்கத்தால் வழங்கிய பார்வையாற்றல் குருடாகி விட்டது. பௌதீகமான பொருள்க்கூட்டங்கள் மீதான ஆதிக்கம் காரணம் இதயத்திலிருந்து அதன் (நேர்வழி) சூடு விலகி கொண்டது. அதற்கு பதிலாக இதயத்தில் சுக-ஆனந்தங்கள் நுழைந்து விட்டது. கடந்த சில வருடங்களாக அல்லாஹ்வின் அனுமதியால் நான் மேற்கொண்ட உலக பயணங்களின் போது எனக்கு கண்டுகொள்ள முடிந்தது பணக்காரர்களாகிய நபர்களின் மிக குறைவான கண்நீர் மட்டுமாகும்.

பரிசுத்த தூதர் முஹம்மது முஸ்தபா(ஸல்)வின் வாழ்க்கை முறைப்படி என் வாழ்க்கையினை அர்ப்பித்துக் கொள்ள நான் எவ்வளவு ஆசைப்படுகின்றேன்? **"பதவியில் சிறந்தவர்" "தூய்மையான இதயத்தின் உரிமையாளர்". "உலகத்தின் சாத்தான்மார்களுக்கு எதிராகவும் சுய நப்ஸிற்கு எதிராகவும் அன்னார் மேற்கொண்ட போராட்டங்கள். தனது பிரியனாகிய அல்லாஹ்வின் பால் தனது ஆன்மாவை பறக்கச் செய்வதற்காக அன்னார் மேற்கொண்ட களங்கமற்ற செயல்கள்!" பௌதீக வறுமையின் நகைகள் அணிந்து தன் அன்பாளனின் அருகாமையை அடைய அன்னார் மேற்க்கொண்ட குற்றமற்ற செயல்கள்!**

இந்த சிறந்த தூதரின் பாதையினை பின்பற்றாதோர்களுக்கு கிடைப்பது மிகப்பெரிய அழிவேயாகும். அல்லாஹ்விடமிருந்து விலகி செல்பவன் துரதிர்ஷ்டசாலியாவான். இப்போதைய முஸ்லீம்கள் இந்த ஆன்மீக ஒற்றுமையினை விரும்புகின்றோர்களல்ல. கடந்து சென்ற அந்த ஆவேசமான பழைய தைரியமும் அதைப்போன்றே அன்றைய உற்சாகம், தீவிரமான உணர்ச்சி, தாகம், அந்த நன்மணம், அந்த நிறம், அந்த திட நம்பிக்கை இவையொன்றயும் இப்போதைய முஸ்லீம்கள் விரும்புவதில்லை. இப்போது பண்டிதர்களுக்கு குர் ஆனின் நல்லொழுக்க கருத்துகள் தேவையில்லை. அல்லாஹ்வின் மதத்தை அவர்களுக்கு ஏற்றவாறு விளக்கிக்கொள்கின்றனர். அதன்பால்(அவர்களின் சுய விளக்கத்தின்பால்) அவர்கள் அடைக்கலம் கொள்கின்றனர். அவர்கள் அக்கிரமித்து விடும் ஓநாய்களை போன்றும் கடுமையான இயல்பைக் கொண்ட உயிரினங்களை போன்றும் மாறிவிட்டனர்.

என் தோழர்களாகயிருப்போர்களே, நான் கூறுவதை கவனிப்போர்களே, இது உங்களின் கடமையாகும் அதாவது நீங்கள் பௌதீக தடங்கல்களை வெற்றிக் கொள்ளுங்கள். அடிப்படையற்ற விருப்பங்களை கைவிட்டு கொள்ளுங்கள். காரணம் அது நம்மை படைத்தவனிலிருந்து அகற்றி விடும். **சாத்தான் நல்லொழுக்கமில்லாத ஒரு உயிரினமாவான். அவன் எப்போது பொறாமையினை ஒளிக்கச் செய்வான். அவனுக்கு இறைவனின் அன்பின்பால் பார்வையிட**

முடியாது. ஆனால் இறைவனோ அன்பை உங்களுக்கு வழங்கியிருக்கின்றான். ஆகவே பொறாமையிலிருந்து மீட்சியை பெற்றுவிடுங்கள். இறைவனிடம் சேர்ந்திருங்கள். உங்களுக்கு அனைத்தையும் வழங்கி கொண்டவன் இறைவனே ஆவான். உங்களின் ஆன்மாவின் பாதுகாப்பு அவன் கரங்களிலாகும். உங்களின் இதயத்தின் சொர்க்கமும் அவனே தான். உங்களின் அனைத்து சுமைகளையும் அவனிடத்தில் சமர்பித்துக்கொள்ளுங்கள். இறை கட்டளைகளுக்கும் இறைத்தூதர்களின் கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டுக்கொள்ளுங்கள்.

இன்ஷா அல்லாஹ்! ஆமீன்


**Issued by:**
Jamaat Ul sahih Al Islam
Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al- islam.com

**Translated by:**
Azim Ahmad
**E-mail:** azimahmad070@gmail.com
Cell: 9789180817